


*Princess நெடுஞ்சாலை-Lonsdale தெருவை நோக்கி புதிய நிலக் கீழ் வீதியில் பயணிக்கும் கார்கள் மற்றும் பாரவண்டிகள். ஓவியரின் அச்சுப்பதிப்பு, இது மாற்றத்திற்கு உட்பட்டது.*

**Webster தெரு, Dandenong /** டிசம்பர் 2024 மற்றும் ஜனவரி 2025

LEVEL CROSSING REMOVAL PROJECT

# இறுதி நிலக் கீழ் வீதி வடிவமைப்பு வெளியிடப்பட்டது.

Cranbourne மற்றும் Pakenham பாதையிடையிலான புகையிரதக் கடவைத் தடை வாயிலை இல்லாததாக்க, Webster தெருவிலுள்ள புகையிரதக் கடவையினை அகற்றி வருகிறோம்.

**நாங்கள் Webster தெருவிலுள்ள புகையிரதக் கடவையினை மூடுகின்றோம் மற்றும் புகையிரத பாதையின் கீழ் புதிய நிலக் கீழ் வீதியினை நிர்மாணித்து, Princes நெடுஞ்சாலை -Lonsdale தெருவை Cheltenham மற்றும் Hammond வீதிகளை இணைக்கிறோம்.**

புதிய நிலக் கீழ் வீதியின் இறுதி வடிவமைப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி இது Dandenong இன் CBDஇலிருந்து போக்குவரத்தை மாற்றுப்பாதையூடாக மாற்றியமைக்கும் மற்றும் Webster தெருவில் இருந்து வரும் கனரக வாகனங்களை நிறுத்தும்.

உங்களது பின்னூட்டம் இந்த வடிவமைப்புகளை வடிவமைக்க உதவியது.

இந்த புகையிரதக் கடவையை அகற்றுவதனால், இது சாரதிகள், பாதசாரிகள் மற்றும் துவிச்சக்கரவண்டி ஓட்டுபவர்களுக்கு பாதுகாப்பை மேம்படுத்தும்.

புகையிரத பாதைக்கு கீழே உள்ள புதிய நிலக் கீழ் வீதி நெரிசலைக் குறைக்கும், மேலும் நம்பகமான வீதி வலையமைப்பை வழங்கும் மற்றும் Dandenongகை எதிர்கால வளர்ச்சிக்கு தயார்படுத்தும்.

ஆரம்ப கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 2025ல் கட்டுமான பணிகள் தொடங்கும்.

**2025 ஆம் ஆண்டு Webster தெருவிலிருக்கும் புகையிரதக் கடவை மூடப்படும், மேலும் புதிய நிலக் கீழ் வீதி 2026 இல் திட்டமிடப்பட்டதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக திறக்கப்படும்.**

## ஏன் இந்த புகையிரதக் கடவை அகற்றப்பட வேண்டும்


இந்த கடவை வழியாக ஒவ்வொரு நாளும் கிட்டத்தட்ட **10,000** வாகனங்கள் பயணிக்கின்றன

புகையிரதக் கடவைத் தடை வாயில்கள் காலை உச்ச நேரத்தின் போது (காலை 7 மணி முதல் 9 மணி வரை) **62 நிமிடங்கள்** வரை மூடப்பட்டு இருக்கும்

2012ல் இருந்து **22** பேர் தவறிவிட்டனர்

**புதுப்பிப்புகளுக்கு பதிவு செய்யவும்**
levelcrossings.vic.gov.au

VICTORIA'S BIG BUILD




# உங்கள் புதிய நிலக் கீழ் வீதி 2026 இல் திறக்கப்படும்

**Webster தெருவிலிருக்கும் புகையிரதக் கடவையை மூடுவதன் மூலம் அதிலிருக்கும் புகையிரதக் கடவைத் தடை வாயிலை அகற்றுகிறோம்.**

புகையிரதக் கடவை மூடப்பட்டவுடன், Webster தெரு உள்ளூர் குடியிருப்பாளர்களுக்கு அமைதியாக இருக்கும்.

புதிய நிலக் கீழ் வீதியை அமைக்க உள்ளோம். இது Princes நெடுஞ்சாலை-Lonsdale தெருவூடாக, Cheltenham-Hammond வீதிகளை இணைக்கிறது.

ஒரு புதிய சமிக்கை சந்திப்புடன், புதிய நிலக் கீழ் வீதி அனைத்து அளவிலான வாகனங்களுக்கும் Cheltenham வீதி மற்றும் Princes நெடுஞ்சாலை-Lonsdale தெரு இடையே கிழக்கு-மேற்காக நேரடி இணைப்பை வழங்கும்.

புதிய நிலக் கீழ் வீதி 2026 இல் திட்டமிடப்பட்டதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக திறக்கப்படும்.


கட்டுமானத்தின் போது கனரக வாகனங்கள் உட்பட அனைத்து வாகனங்களுக்குமான மாற்றுப்பாதையை தீர்மானிக்க நாங்கள் தொடர்ந்து அரசு மற்றும் போக்குவரத்து அமைப்புகளுடன் நெருக்கமாக பணியாற்றி உதவுவோம். மாற்றுப்பாதைகள் பற்றிய கூடுதல் தகவல்கள் 2025ம் ஆண்டு கிடைக்கும்.

நாங்கள் ஒரு புதிய நடைபாதையையும் உருவாக்குகிறோம் மற்றும் துவிச்சக்கர வண்டி பாதையினை புகையிரத பாதைக்கு கீழாக Webster தெருவோட, Dandenong CBD இல் உள்ள உள்ளூர் கடைகள் மற்றும் சேவைகளுடன் குடியிருப்பாளர்களை இணைக்கிறது.

> **புதிய பகிரப்பட்ட பாதை 3 மீட்டர் அகலத்தில் இருக்கும் மற்றும் Dandenong சிற்றோடை பாதையுடன் இணைக்கப்படும்.**



புதிய *Webster* தெரு பகிரப்பட்ட பாதையுடன், *Webster* தெரு புகையிரதக் கடவையுடன் மூடப்பட்டது. ஓவியரின் அச்சுப்பதிப்பு, இது மாற்றத்திற்கு உட்பட்டது.




*Webster தெரு புகையிரதக் கடவை அகற்றுதல் மற்றும் புதிய நிலக் கீழ் வீதியின் வரைபடம். ஓவியரின் அச்சுப்பதிப்பு, இது மாற்றத்திற்கு உட்பட்டது.*

# வடிவமைப்புகளை வடிவமைத்தல்

## ஆலோசனையின் போது நாங்கள் உங்களிடம் கேட்டறிந்தது இதுதான்.

**நெரிசலைக் குறைக்கும்**
நீங்கள் போக்குவரத்து நிலைமைகளை மேம்படுத்தவும், பயணங்களை எளிதாக்கவும் ஒரு வடிவமைப்பு வேண்டும் என்று எங்களிடம் கூறினீர்கள்.

புதிய நிலக் கீழ் வீதி புதிய கிழக்கு-மேற்கு இணைப்பை வழங்கும், பாரவண்டிகள் மற்றும் கனரக வாகனங்களை உள்ளூர் சாலைகளில் இருந்து தொலை நகர்த்தும் மற்றும் Dandenong CBDஇன் மையத்திலிருந்து விலகிச் செல்லும். புதிய நிலக் கீழ் வீதி வழியாக செல்லும் வாகனங்கள் புதிய சமிக்கை சந்திப்பில் Princes நெடுஞ்சாலை-Lonsdale தெருவுடாக இடது மற்றும் வலது பக்கம் திரும்ப முடியும்.

**மரங்கள், தாவரங்கள் மற்றும் பசுமையான இடங்கள்**
உள்ளூர் மற்றும் பூர்வீக இனங்களுக்கு முன்னுரிமை அளித்து, மரங்கள் மற்றும் பசுமை நடப்படுவதை நீங்கள் பார்க்க விரும்புவதாக நாங்கள் கேள்விப்பட்டோம்.

பல்வேறு வகையான உள்ளூர் மற்றும் பூர்வீக மரங்கள், புதர் செடிகள் மற்றும் பூக்கள் கொண்ட புதிய நிலத்தோற்ற பகுதிகள் வடிவமைப்புகளில் அடங்கும். இவை இப்பகுதியின் நிலத்தோற்ற மற்றும் புவியியலுக்கு துணைபுரியும் தாவரங்களாகும்.

**சிறந்த நடை மற்றும் துவிச்சக்கர வண்டி பாதை இணைப்புகள்**
நீங்கள் பாதசாரிகள் மற்றும் துவிச்சக்கர வண்டி ஓட்டுபவர்களுக்கு சிறந்த இணைப்புகளைப் பார்க்க விரும்புவதாக எங்களிடம் கூறியுள்ளீர்கள். 2025 ஆம் ஆண்டில் Webster தெருவில் இருக்கும் புகையிரத கடவை மூடப்படும் முன், நாங்கள் புகையிரத பாதையின் கீழ் Webster தெருவுடன் சேர்த்து புதிய பகிரப்பட்ட பாதை ஒன்றை உருவாக்குவோம்.



புகையிரத பாதையின் கீழ் *Webster* தெருவோட சேர்ந்த புதிய பகிரப்பட்ட பாதை. ஓவியரின் அச்சுப்பதிப்பு, இது மாற்றத்திற்கு உட்பட்டது.

**கண் கவர் வடிவமைப்பு**
பிரகாசமான மற்றும் கண்கவரக்கூடிய வண்ணங்களுடன், அந்த பகுதியில் ஒரு அம்சமாகத் தனித்து நிற்கும் வடிவமைப்பை நீங்கள் விரும்புவதாகக் கேள்விப்பட்டோம். புதிய நிலக் கீழ் வீதி சுவர்கள் Dandenong மற்றும் லிட்டில் இந்தியா கலாச்சார வளாக வண்ணங்களைப் பிரதிபலிக்கும்.

**ஆலோசனை அறிக்கையில் நாங்கள் கேட்டறிந்ததை பற்றி நீங்கள் இதில் மேலும் வாசிக்கலாம் levelcrossings.vic.gov.au/webster-street** அல்லது QR குறியீட்டை உபயோகிக்கவும்

# மேலும் அறிய எங்களுடன் ஈடுபடுங்கள்

**திட்டக் குழுவிடம் பேசுவதற்கு எங்கள் தகவல் அமர்வுகளில் சேரவும். கேள்விகளைக் கேளுங்கள் மற்றும் இறுதி வடிவமைப்புகளைப் பற்றி மேலும் அறியவும்.**

**எங்களை நேரில் பார்க்கவும்**

**எப்போது:** ஜனவரி 23 வியாழன், மாலை 5.30 முதல் இரவு 7.30 வரை

**எங்கே:** Dandenong சமூகம் மற்றும் கற்றல் மையம், 34 King street, Dandenong

**நிகழ்நிலை Zoom வழியாக**

**எப்போது:** ஜனவரி 21 செவ்வாய், மதியம் 12.30 முதல் 1.30 வரை

**எங்கே:** Zoom சந்திப்பு இணைப்பை பெற பதிவு செய்யவும்

முன்பதிவுகள் தேவை. QR குறியீட்டை உபயோகிக்கவும் அல்லது வருகை தரவும் **levelcrossings.vic.gov.au/webster-info-sessions** எங்கள் தகவல் அமர்வுகளுக்கு பதிவு செய்ய.

# அடுத்த ஆண்டு கட்டுமானம் தொடங்கும்

**முதற்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன, மற்றும் 2025ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கட்டுமானம் தொடங்கும்.**

கட்டுமானம் தொடங்கும் போது, நீங்கள் அதிக வேலையாட்களையும் வாகனங்களையும், அதனுடன் தள கொட்டகைகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் பொருட்களுக்கான பகுதிகளையும் பார்ப்பீர்கள். நாங்கள் உங்களுக்கு நிறைய

அறிவிப்பு மற்றும் கூடுதல் தகவல்களை எங்கள் வேலைகளுக்கு முன்னால் வழங்குவோம், ஆகையினால் நீங்கள் முன்கூட்டியே திட்டமிடலாம்.



*Webster தெருவில் இருக்கும் புகையிரத கடவை மூடப்பட்டது, மேலும் Princes நெடுஞ்சாலை-Lonsdale தெருவில் இருந்து Cheltenham மற்றும் Hammond வீதிகளுக்கு புதிய நிலக் கீழ் வீதி. ஓவியரின் அச்சுப்பதிப்பு, இது மாற்றத்திற்கு உட்பட்டது.*

## திட்டகாலவரிசை

**2018**

திட்டம் அறிவிக்கப்பட்டது

**2022 முதல் 2023 இறுதி வரை**

தள ஆய்வுகள், போக்குவரத்து கருத்து கணிப்புகள் மற்றும் திட்டமிடல் பணிகள்

**நவம்பர் 2023**

கருத்து வடிவமைப்புகள் வெளியிடப்பட்டன

சமூக ஆலோசனை

தளத்தில் ஆய்வுகள் தொடர்கின்றன

**2024 இன் பிற்பகுதி**

இறுதி வடிவமைப்புகள் வெளியிடப்பட்டன

ஆரம்ப வேலைகள்

**2025**

கட்டுமானம் தொடங்குகிறது

புகையிரத பாதையின் கீழ் நடை மற்றும் துவிச்சக்கர வண்டி பாதை திறக்கிறது

புகையிரதக் கடவைத் தடை வாயில்கள் நல்லதற்காக அகற்றப்பட்டுவிட்டது

Webster தெருவிலிருக்கும் புகையிரதக் கடவை மூடப்பட்டது

**2026**

கட்டுமானம்

புதிய நிலக் கீழ் வீதி திறக்கப்படல்

** காலவரிசை, இது மாற்றத்திற்கு உட்பட்டது.*

## புதுப்பித்த நிலையில் இருங்கள்

**மின்னஞ்சல் புதுப்பிப்புகளுக்கு பதிவு செய்யவும் levelcrossings.vic.gov.au/subscribe** மற்றும் Cranbourne-Pakenham பாதையின் கீழாக Webster Street, Dandenongஐ தேர்வு செய்யவும்.

**திட்டத்தைப் பற்றி மேலும் படிக்கவும் மற்றும் இறுதி வடிவமைப்புகளைப் levelcrossings.vic.gov.au/webster-street** ஐ பார்க்கவும்


**levelcrossings.vic.gov.au**

contact@levelcrossings.vic.gov.au

1800 105 105 (எப்போது வேண்டுமானாலும் அழைக்கவும்)


ஆங்கிலம் தவிர மற்றைய மொழிகளுக்கு, தயவு செய்து 9209 0147 என்ற எண்ணை அழைக்கவும்.

இந்த தகவலை அணுகக்கூடிய வடிவத்தில் நீங்கள் பெற விரும்பினால் எங்களை தயவு செய்து தொடர்பு கொள்ளவும். ஒரு செவிப்புலன் காரணமாக உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் அல்லது பேச்சு குறைபாடுக்கு, **relayservice.gov.au** ஐ பார்வையிடவும்

VICTORIA State Government

NWP11302